30 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மேத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 8-4-33

எலும்பா, மனிதனா?



Courtesy of "Hindustan Times"

"குடியானவன் யார் யாருக்குப் பணம் கொடுக்க வேண்டுமோ அவரவர்களுக்கு கொடுத்துக்கொண்டே தானிருக்கிறான்" என்று ஐக்கிய மாகாண கவர்னர் கூறுகிறார். ஒரு பக்கம் ஜமீன்தாரோ அல்லது தாசில்தாரோ 'வரிப்பணம்' 'வரிப்பணம்' என்று குடியானவனிடமிருந்து வசூல் செய்து கொண்டுபோய் விடுகின்றான். இன்னொரு புறத்தில் 'வட்டியைக் கொடு' 'முதலைக் கொடு' என்று கடன்தந்த சாவுக்கார் பறித்துக் கொண்டு போய் விடுகின்றான். 'உழுது விதைத்து அறுப்பாருக்கு உணவில்லை' என்ற காக்ஷி நடைபெறுகின்றது. கொடுத்துக் கொடுத்து, குடும்பம் முழுவதும் பட்டினியாகி, எலும்பும் தோலுமாய் இருக்கின்றனர் குடியானவர்!

“வெற்றி பெற்றது எது? காங்கிரஸே!”

சத்தியம் சாகுமா? அகிம்ஸா தர்மத்துக்குத் தோல்வி யுண்டா? சத்தியத்தையும் அகிம்சையையும் தனது அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டுள்ள காங்கிரஸ் மகா சபையை இந்த பிரிட்டிஷ் அரசாங்க மல்ல, வேறெந்த அரசாங்கமாயினும் அழிக்க முடியா தென்பதை உலகம் அறிந்து கொள்ளுமாக. கல்கத்தாவில் ஆயிரக் கணக்கான காங்கிரஸ் வீரர்களைக் கைது செய்து சில தினங்களில் அரசாங்கம் அத்தனை பேரையும் விடுவிப்பானேன்? சிறையில் இட மில்லையா? அல்லது இவ்வளவு பேரைக் கைது செய்ததற்காக பிரிட்டிஷ் சர்க்காரை உலகம் கேலி செய்யுமே என்ற பயமா? காங்கிரஸ் தினத்தன்று கல்கத்தாவில் தடியடி தர்பாரும் நடந்து பலருக்குக் காய மேற்பட்டது. இந்தத் தடியடி தர்பாரை நடத்துவானேன்?

‘முதற் கோணல் முற்றிலும் கோணல்’ என்பார்கள். காங்கிரஸைத் தடுக்கப் போவதாக சர்க்கார் தீர்மானித்தது முதற் தப்பிதம்; கல்கத்தா கமிஷனருக்கு சர்வாதிகாரம் கொடுத்தது அடுத்த தப்பிதம்; பண்டித மாளவியா போன்ற அரும்பெருந் தலைவர்களுக்குத் தடையுத்தரவு போட்டது அறிவீனம். இப்படி ஆரம்பம் முதல் தவறே யிழைத்து வந்ததற்குச் சிகரம் வைத்தது போல கடைசியில் கல்கத்தாவில் தடியடி தர்பாரும் நடத்தித் தீர்த்தார்கள். இத்தகைய தடபுடல்களைச் செய்து காங்கிரஸை நசுக்க விரும்பிய அரசாங்கம், பரம சாது போல, மறு நாள் காங்கிரஸ் தீர்மானங்களையெல்லாம் பிரசுரிப்பதற்கு பத்திரிகைகளுக்கு அநுமதி கொடுத்ததுதான் வேடிக்கை. பத்திரிகைகளில் மட்டும் தீர்மானங்கள் வெளியிடப்படலாமாம்; ஆனால் ஆயிரம் பேர் கூடி அத்தீர்மானங்களை அங்கீகரிக்கலாகாதாம். என்னே சர்க்கார் மூளையின் போக்கு!

பண்டித மாளவியாவின் அக்கிராசனப் பிரசங்கத்தில் ஆரம்பம் முதல் முடிவு வரை தேசியம் கமழ்கின்றது. அந்தப் பிரசங்கத்தைப் பகிரங்க மேடையில் பேசுவதற்கு மாளவியாவை அன்று அநுமதித்திருந்தால் பிரிட்டிஷ் அரசாங்கம் கவிழ்ந்து போயிருக்குமா என்ன? ஏன் இப்படி அரசாங்கம் அன்று பீதியடைந்ததோ தெரியவில்லை. மாளவியா பிரசங்கத்தில் ஓர் பகுதி பின்வருமாறு:

“தேச மக்களின் ‘பார்லிமெண்டு சபை’ யென்றே காங்கிரஸைக் கருதவேண்டும். சென்ற 47 வருஷங்களாக அது செய்திருக்கும் தேச சேவை அபாரமானது. சுதந்திரத்துக்காகவும் தேசமக்களின் உரிமைக்காகவும் இடைவிடாது காங்கிரஸ் போர் புரிந்து வருகிறது. ஆகவே தேசமக்கள் தங்களின் வழி காட்டியாகிய காங்கிரஸைப் பின்பற்றி வருகின்றனர். அதன் பயனாக தியாகங்கள் செய்வதற்கும் அவர்கள் தயாரா யிருக்கின்றனர்.

* * * *

“சென்ற பதினைந்து மாத காலத்துக்குள் தேசத்தில் லக்ஷத்து இருபதினாயிரம் மக்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கோட்ட மடைந்திருக்கின்றனர். அடக்கு முறை யாட்சியைத் தொடங்கும் போது, ஆறு வாரத்தில் இயக்கத்தை நிறுத்தி விடலா மென அதிகாரிகள் மனப்பால் குடித்தனர். 15 மாத மாகியும் பலிக்கவில்லை. இன்னும் 15 மாதங்கள் முண்டினாலும் அக் காரியம் பலிக்காது. பகிரங்கமாக நடைபெறும் கொண்டாட்டங்களைத் தனது மிருக பலத்தினால் சர்க்கார் அடக்கிக் கொண்டிருக்கலாம். ஆனால் அதன் பயன் என்ன தெரியுமா? காங்கிரஸின் கொள்கைதான் அதன் பயனாக வெற்றி பெறுகின்றது. கன்ஸெர்வேடிவ்களால் நடத்தப்படும் கவர்ன்மெண்டின் கௌரவம் வர வரக் குறைந்து போகின்றது. தேச மக்களின் அதிருப்தியும் வர வர அதிக மாகின்றது. இங்கிலாந்தின் அரசாட்சியினின்று விலகியே தீரவேண்டும் என்ற அவா மேம்படுகின்றது.

* * * *

“நமது எல்லை தெளிவா யிருக்கின்றது. கணக்கற்ற ஆண்கள், பெண்கள், குழந்தைகள், சென்ற 3 வருடங்களாகச் செய்து வரும் வீரப் போரைக் கண்டு உலகம் பிரமிப்படைந்துளது. தியாகிகள் அழியாப் புகழடைந்து வருகின்றனர். இன்னும் நமது உறுதியை மேம்படுத்திக் கொள்வோமாக! சுதந்திரத்துக்காக எத்தகைய தியாகமும் செய்வோமாக!

“எதிரே சூழ்மும் இருளின் இடையே தெளிவாய் கிரணம் தெரிகின்றது காண்! சுதந்திர உதயம் தோன்றும் வரையில் வீரர் கடமை செய்வாராக! சத்தியம் நமது பக்கம் உண்டு! நீதி நமது நெறியில் உண்டு! வெற்றி யுறுவது திண்ணம்! திண்ணம்!”

வந்தே மாதரம்.

ஒரே ததிங்கண தோம்!

சாதாரண நாட்டுப் புறத்தானுக்கும் ஒரு பெரிய பொருளாதார நிபுணருக்கும் அடியிற் கண்ட சம்பாஷணை நடந்தது.

நாட்டான்:—அய்யா, ரயில்வேக்களுக்கு வரும்படி குறைந்து போச்சு நாமே அதற்குக் காரண மென்ன?

நிபுணர்:—உலகமெங்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடி தான் காரணம்.

நாட்டான்:—மாகாணத்து துரைத்தனங்களில் வரவுக்கும் செலவுக்கும் சரியா யில்லையே, ஏன்?

நிபுணர்:—உலக நெருக்கடி தான்!

நாட்டான்:—இராணுவச் செலவு இன்னும் ஏன் குறைக்கப்பட வில்லையாம்?

நிபுணர்:—அதற்கும் உலகத்தில் ஏற்பட்டுள்ள வேறு விதமான நெருக்கடியே காரணம்.

நாட்டான்:—'இன்கம் டாக்ஸை' உயர்த்தினர்களே அது நிரந்தரமாக அப்படியே இருக்குமாமே என்ன காரணத்தால்?

நிபுணர்:—பூலோக மெங்கு முள்ள நெருக்கடி தான் காரணம்.

நாட்டான்:—சர்க்கார் உத்யோகஸ்தர்களின் சம்பளங்களை மட்டும் மறுபடி ஏன் ஜாஸ்தி யாக்கினுர்கள்?

நிபுணர்:—சர்க்கார் சம்பளத்திற்கும் உலக நெருக்கடிக்கும் சம்பந்த மில்லையென எண்ணியதால் உயர்த்தினர்கள்.

நாட்டான்:—துறைமுகச் சுங்கவரி அதிகமானதேன்?

நிபுணர்:—உலக நெருக்கடியால்.

நாட்டான்:—எங்கள் ஊரில் இன்னும் ஏன் பாலம் போடவில்லை?

நிபுணர்:—உலகத்தில் இப்போது பண நெருக்கடியா யிருப்பதினுல்.

நாட்டான்:—தொழிலாளிகளுக் கெல்லாம் வேலை போய்விடுகிறதே, ஏன்?

நிபுணர்:--பூலோகத்திலேயே இப்போது நெருக்கடியான காலமல்லவா?

நாட்டான்:—இந்திய விவசாயிகளின் குடும்பங்கள் ரொம்ப கஷ்டப்படுகின்றனவே! சிலர் தற்கொலை செய்து கொள்ளுகிருர்களாமே! அதற்கெல்லாம் காரண மென்ன?

நிபுணர்:—பாழும் உலகத்தி லேற்பட்டுள்ள நெருக்கடி தான் காரணம்.

நாட்டான்:—ஏன் ஏராளமான தங்கம் இந்தியாவை விட்டுப் போய்க்கொண்டிருக்கிறது?

நிபுணர்:—அதற்கும் பூலோக நிலைதான் காரணம்.

நாட்டான்:—என்ன ஐயா! எதந்கெடுத்தாலும் உலக நெருக்கடி உலக நெருக்கடி என்று ஒரே ததிங்கணதோம் போடுகின்றீர்கள்! (சலிப்போடு) சனியன் 'உலக நெருக்கடி' என்றால் என்ன ஐயா அர்த்தம்?

நிபுணர்:—அதை விவரிப்பது கஷ்டம். நிபுணர்களுக்குள் அதில் அபிப்பிராய பேதங்கள் அதிகமா யிருக்கின்றன.

நாட்டான்:—சரி, இந்த உலக நெருக்கடியைத் தீர்க்க என்னதான் வழி!

நிபுணர்:—உலகத்துக்கே மருந்து கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் 'உலகப் பொருளாதார நெருக்கடி நிவர்த்திக்கும் மகாநாடு' என்ற பிரும்மாண்டமான கூட்டத்தைக் கூட்டப் போகின்றார்கள். நிபுணர்கள் ஆலோசிப்பார்கள். கடைசியில் 'அருட் சோதியே வழி காட்டு' என்ற பாட்டோடு மகாநாட்டை முடிப்பார்கள்.

—இந்தியன் பைனன்ஸ்.

நாடு காத்த பின்பு காதல்!

ஷியா-மே-பான் என்ற சீனப் பெண்ணுக்கு வயது பத்தொன்பது தான். தனது தேசத்தைக் காப்பதற்காக அவள் போர் முனைக்குப் புறப்பட்டு விட்டாள். ஆனல் புறப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்புதான் அவளுக்குக் கல்யாணமாகி யிருந்தது. தனது புருஷனுக்கு அவள் எழுதியுள்ள வீரம் ததும்பும் கடிதத்தில் பின்வரும் வரிகள் உள:—

"வடக்கே சீன இழந்துள்ள நாடுகளைத் திரும்ப பெற்ற பின்னர் தான் நான் ஊர் திரும்புவேன். பிறகு நமது காதல் வாழ்க்கையை ஆரம்பிப்போம். போர்க் களத்தில் காயம் பட்டவர்களை சம்ரக்ஷிப்பதே எனது கடமை யென எண்ணி நான் புறப்பட்டிருக்கிறேன்".

ஷியா-மே-பான், ஷாங்காய் என்ற ஊருக்கருகே யுள்ள கிராமத்தில் ஒரு பணக்கார வம்சத்தில் பிறந்தவள். ஒரு மாதத்துக்கு முன்பு தான் பணக்கார வம்சத்தில் வாழ்க்கைப் பட்டாள். ஆனல் திடீரென்று தனது கடமையைச் செய்ய அவள் புறப்பட்டு விட்டாள்.

—பம்பாய் கிரானிகிள்.

ரயில்வேயில் இனாம் சவாரி

(டிக்கட்டில்லாதவன்)

ரயில்வே கம்பெனியை ஏமாற்றுவதில் எனக்கொரு சந்தோஷம். எத்தனையோ தடவை நான் அவ்வாறு செய்திருக்கிறேன் எனக்கோ என் சாமானுக்கோ கூலி தராமல் ஜாக்ரதையாக நான் போயிருக்கிறேன். முதல் வகுப்புத் தான் இதற்கு சவுகர்யம்—இரண்டாவது வகுப்பும் பரவாயில்லை—ஆனால் மூன்றாம் வகுப்பில் முடியவே முடியாது.

3ம் வகுப்பில் டிக்கட்டில்லாமல் போகிறவனுக்கு உதை கிடைக்கும். அங்கு லஞ்சம் வாங்கிக் கொள்ள டிக்கட் கலெக்டர்கள் யோசிப்பதுண்டு. மூலையிலுள்ளவர் யாராவது 'விட்டு ஒழியுங்களையா?' என்று சிபார்சு செய்யாவிடில் டிக்கட்டில்லாதவன் பாடு தகராறுதான். டிக்கட்டில்லாத பிராணிகள்மீது 3வது வகுப்பினருக்குக் கொஞ்சம் அநுதாபமுண்டு.

ஆனால் நல்ல 'டிரெஸ்', இரண்டு மூன்று படமுள்ள பத்திரிகைகள், நல்ல ஸிகரெட் டப்பா, கிளாஸ் தம்ளர், ஸோடா பாட்டில், பெரிய தோல் பெட்டிகள் முதலியவைகளோடு முதல் வகுப்பில் பிரயாணம் செய்தால் தப்பித்துக் கொள்ளலாம். எத்தனையோ தடவைகளில் ஒரு ஸிகரட்டை டிக்கட் கலெக்டரிடம் நீட்டி விட்டு 'ஐயா என்னிடம் டிக்கட் இல்லை. உங்க குப்ரண்டு யாரு?' என்று பேச்சு ஆரம்பிப்பேன். கடைசியில் உறவு கொண்டாடுவேன். "டிக்கட்டை ஸர்வெண்ட் வைத்துக் கொண்டிருந்தான். எங்கே அந்தப் பயல்?" என்று கூவுவேன். "பரவாயில்லை" என்று சொல்லிவிட்டு அவர் போய் விடுவார்.

ஆங்கிலோ இந்திய டிக்கட் கலெக்டர்களாயிருந்தால் அவர்களை வசம் செய்ய 'விஸ்கி' நல்ல வேலை செய்யும். ஓர் சமயத்தில் குடிவெறி போல அபிநயித்து, ஏதாவது பழைய டிக்கட்டை வெளியே யெறிந்து "நீ போ! சனியனே! நீ இல்லாமற் போனாலென்ன? என் நண்பரில்லையா? இது என் ரயிலல்லவா?" என்று கூச்சலிட்டேன். காரியம் சித்தித்தது.

டிக்கட் இல்லாது பிரயாணம் செய்வதற்கும், காந்தியின் முழுத் துணிக்கும் வெகு தூரம்! கேவலமாக ஆடை யணிந்தவனிடம் தான் டிக்கட் கலெக்டர்கள் தடபுடல் பண்ணுவார்கள். ரயில்வேயில் இனாம் சவாரி செய்ய கட்டாயமாய் நல்ல 'டிரெஸ்' இருக்கவேண்டும்.

—ராய்ஸ் விக்லி.

கிழவிக்கேற்ற பாட்டி

ஒரு கிழவி கடலில் ஒரு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து கொண்டிருந்தாள். 'ஏனம்மா அப்படிச் செய்கிறாய்' என்று இன்னொரு பாட்டி அவளை கேட்டாள். "இப்படிப் பிழிந்து கொண்டிருந்தால் நாளடைவில் கடல் நீர் ருசி மிகுந்ததாகி விடுமல்லவா?" என்று கிழவி சொன்னாளாம். "ஐயையோ! அப்படிப் பண்ணாதே! அப்புறம் நமக்கு உப்பு கிடைக்காமல் போயிடுமே" என்று அந்தப் பாட்டி முனகினாளாம்.

இந்தியாவில் பெரிய சம்பளமுடைய உத்யோகங்களெல்லாம் ஐரோப்பிய மயமாக இருந்து வருகின்றன. ரயில்வே, இராணுவம், போன்ற பல இலாக்காக்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். இந்தியன் ஸிவில் ஸர்விஸிலும், போலீஸ் இலாகாவிலும் தான் சில இந்தியர்களை நுழைத்திருக்கின்றனர். ஆனால் அதைப் பிரமாதமாக பிரிட்டிஷார் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். என்றைக்கு அந்த இலாகாக்களை இந்திய மயமாக்கப் போகிறார்களென்று பார்லிமெண்டில் ஒருவர் கேள்வி கேட்டார். அதற்கு இந்தியா மந்திரி பதில் சொன்னார்.

இந்திய ஸிவில் ஸர்விஸில் எவ்வாறு ஐரோப்பியர் தொகை குறைக்கப்பட்ட தென்பதற்கு கணக்குத் தந்தார்.

1928-ம் ௵த்தில்	922	ஐரோப்பியர்
1932 ,,	843	,,
இனி 1938ல் எதிர்பார்ப்பது	670	,,

போலீஸ் இலாகாவின் கணக்கையும் தந்தார்.

1928-ம் ௵த்தில்	569	ஐரோப்பியர்
1932 ,,	528	,,
இனி 1938 ,,	460	,,

இதைத் தவிர இதர இலாக்காக்களில் புகுந்து பார்த்தால் பெரிய சம்பள மெல்லாம் ஐரோப்பியருக்குத் தான். இப்படியாகக் கடலில் பெருங்காயம் கரைத்த கதையாக இந்தியர்களுக்கு ஏதோ சில உத்யோகங்களைத் தந்து விட்டு, சவடால் அடிக்கின்றனர்.

ஆனால் இந்தக் கணக்கைக் கண்டு ஸர் ஆல்பிரட் நாக்ஸ் என்றவன் வயிறெரிந்து, "இவ்வளவு வேகமாகவா இந்திய மயம் செய்வது?" என்று பார்லிமெண்டில் கூச்சலிட்டானாம். கிழவிக் கேற்ற பாட்டி!

காபூலி கலாட்டா

ஏழைகளுக்குக் கடன் கொடுத்து அவர்களைத் தடியால் பயமுறுத்தி வட்டி வசூலிப்பதோடு நிரந்தரமாக அந்த ஏழைகளைத் தங்களுக்கு அடிமை யாக்கிக் கொள்வோர் சிலருண்டு. வங்காளத்திலுள்ள காபூலிகளிடம் அகப்பட்டுக் கொண்டு அவஸ்தைப் படுகிறவர்கள் பெரும்பாலும் ஹரி ஜனங்கள் தான். கடன் வாங்கியவனிட மிருந்து கடன் தொகையைப் பெற்றுக் கொள்ள காபூலிகள் முற்படுவதில்லை. நிரந்தரமாக வட்டியை வசூலிப்பது தான் நல்ல கொள்ளையாக இருந்து வருகிறது.

வங்காளி 'ஹரிஜன்' பத்திரிகை கூறும் விவரங்கள் பின்வருமாறு:"ஒரு ஹரிஜன சகோதரர் 10 வருடமாக வட்டி கொடுத்து வருகிருரேயன்றி, முதலைத் தீர்க்க முடியவில்லை. இன்னெருவர் மூன்று வருடத்துக்கு முன் 30 ரூபா வாங்கிஞராம். மாதா மாதம் 3 ரூ. வட்டி கொடுத்துக் கொண்டிருக்கிருராம். இன்னும் கடன் சுமை அப்படியே அவர் மீதிருக்கிறது.

"மேலும் காபூலிகள் கோர்ட்டுக்குப் போவதே யில்லையாம். எல்லாம் தடியைக் காட்டி மிரட்டியே காரியம் சாதித்துக் கொள்கின்றனராம்.

"அன்று முனிசிபாலிட்டியில் சம்பளம் கொடுக்கும் தினம். தயாராகக் காபூலிகள் வந்து நின்றனர். சில ஹரி ஜனங்கள் பணம் தர முடியாதென்று கூறினர். காபூலிகளுக்குக் கோபம் வந்தது. பயமுறுத்தப்பட்ட ஹரிஜன சகோதரர்,ஹரிஜன சேவா ஆசிரமத்திற்கு வந்து விஷயத்தைக் கூறினர். காபூலியைப் பார்த்து "நீ எங்களை அடித்தாலும் அடித்துக் கொள். கடன் பத்திரத்தை நீ கொண்டு வராத வரை காலணு தர முடியாது" என்று ஹரிஜனர் சொல்லி விட்டாராம். "அந்தப் பயலைக் கொன்று விடுகிறேன்" என்று காபூலி உறுமினுன். "கொன்று விட்டாயானுல் பிறகு பணம் எப்படி உனக்கு வரும்" என்று ஹரிஜனனின் மனைவி கூறினுள். "உன் கழுத்தையும் வெட்டி விடுகிறேன் பார்" என்று காபூலி கோபித்தான். "என்றைக்காவது ஒரு நாள் சாக வேண்டியது தானே. இன்றைக்கு உன் கையால் செத்தால் போச்சுது" என்று அந்தப் பெண் கூறிவிட்டாள்.

தடியடிகளைத் தாங்கிக் கொள்ள ஹரி ஜனங்கள் தயாரென்று தெரிந்தால் பிறகு காபூலியின் திமிர் அடங்கி விடுமல்லவா?

எதில் அவமானம் இருக்கின்றது?

ஒரு பிரதேசத்தில் நாறு கிணறுகள் இருப்பதாகவும் அதில் ஒரே ஒரு கிணறு தான் ஹரி ஜனங்களுக்கு விடப்பட்டிருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். இந்த நிலைமை அவமானமானது தான். ஆனுல் அதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்வதில் துளி அவமானமும் கிடையாது. அவ்வாறு ஒப்புக் கொள்வதால் பிறகு ஒரு நன்மையும் ஏற்படுகின்றது. எப்படியெனில் துயரங்களின் சொருபம் நன்கு தெரிவதால் அவைகளைப் போக்குவதற்கு வழியும் நன்கு புலப்படும். —மகாத்மா காந்தி.

சீர்திருத்தக்காரர்களுக்கு

ஹிந்து மதத்துக்கு ஏதோ பெரிய ஆபத்து வந்து விட்டதென்று கனவு கண்டு ஸனுதனிகள் எங்கெங்கு பெருங் கிளர்ச்சி தொடங்குகின்றுர்களோ, அங்கெல்லாம் சீர்திருத்தக்காரர்கள் ஜாக்ரதையாக இருக்க வேண்டும். தப்பான வழியில் ஸனுதனிகளை இழுத்து வைத்து சண்டை போடுவானேன்? எங்கேயாவது கோபமும் தாபமும் பொங்கி வழியுமானுல் அவ்விடங்களில் பொதுக் கூட்டங்களை நடத்த வேண்டாமென சீர்திருத்தக்காரர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பொய்களை எதிர்த்துப் பிரசாரம் செய்யும்போது கூட ஒவ்வொரு வார்த்தையையும் கணக்கிட்டுப் பேச வேண்டும்; எழுதவேண்டும். உலகத்தில் எதையும் பொய்யினுல் ஆதரிக்க முடியாது. மத சம்பந்தமான விஷயத்தில் கேட்க வேண்டுமா?

—'ஹரிஜனம்' பத்திரிகையில் மகாத்மா காந்தி.

சுதேசி அணியாததற்கு பூட்ஸடி

பெர்ஷியாவில் 'சுதேசி' இயக்கம் பலமாயிருந்து வருகிறது. பெர்ஷியாவின் வேந்தனான 'ஷா' என்பவர் அந்த இயக்கத்தைத் தலைமை வகித்து நடத்தி வருகிறார். பெர்ஷியச் சாமான்களையே வாங்க வேண்டும் என்பது ஓர் பித்தமாக அந்த நாட்டில் ஆகி விட்டதென்று சொல்லலாம். 'ஷா' என்ற அரசரின் தீவிர 'சுதேசி' புத்திக்கு ஓர் உதாரணம் கிடைத்திருக்கிறது.

ஒரு நாள் அரசரின் மோட்டார்கார் தெருவில் நின்று கொண்டிருந்தது. மிக்க நேர்த்தியாக ஆடை யணிந்து கொண்டிருந்த ஓர் இளைஞன் அந்த மோட்டாரை விறைத்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். அரசர் அவ்விளைஞனருகே சென்று, "அப்பா! நான் போட்டுக் கொண்டிருக்கும் மேஜோடுகள் பெர்ஷியாவில் செய்யப்பட்டது. நீ போட்டுக் கொண்டிருப்பது எங்கே செய்யப்பட்டது?" என்று கேட்டார். இளைஞன் தெத்தித் தெத்தி ஏதோ உளறினான். உடனே "ஓ ஹோ! அந்தக் கம்பெனியா? அந்தக் கம்பெனியிலுள்ள சாமான்கள் அந்நியச் சாமான்களாயிற்றே! அமெரிக்கா, பிரான்ஸு, இங்கிலாந்து முதலிய தேசத்து சாமான்களல்லவோ அங்கு வைக்கப்படுள. அவைகளை வாங்கும் நீ ஒரு உதவாக்கரையான பர்ஷியன்! என் தேசத்தை உங்களைப் போன்ற ஷோக்கு மிகுந்த இளைஞர்கள் தான் பாழாக்கி வருகின்றீர்கள். எனக்கு எது தேவையோ, எது போதுமோ அந்தச் சாமான் உனக்குப் போதாதா என்ன? ஏன் அந்நியச் சாமான்களை வாங்குகின்றாய்?" என்று ஆத்திரத்தோடு கூறியதோடு அரசர் நிற்கவில்லை. காலிலிருந்த பூட்ஸைக் கழற்றிக் கொண்டு, கொஞ்சமாவது இரக்கம் காட்டாமல் அந்தப் பையனை பூட்ஸாலடித்ததோடு, "இனியாவது புத்தியோடு நடந்து கொள்" என்று சொல்லி விட்டு அகன்றாராம்.

இந்தியாவில் எவ்வளவோ இளைஞர்கள், எவ்வளவோ மாணவர்கள் ஷோக்காக ஆடையணிந்து அலைகின்றனர். 'சுதேசி' என்பது 'ஸாம்பிளு'க்குக் கூட சிலரிடம் கிடையாது. பர்ஷிய அரசரைப் போல பூட்ஸால் அடிப்பதற்கு இந்தியாவில் எவரும் இல்லை என்ற தைரியத்தினாலல்லவா நமது இளைஞர்கள் இப்படி திமிர் பிடித்து அலைகின்றனர்? இனிமேலாவது புத்தி வருமா பார்ப்போம்.

கௌரி சங்கர தரிசனம்

பாரத நாட்டின் பெருமைக்கு நிலைக்களமாக, கம்பீரமான ஹிமயமலை இருந்து வருகிறது. அம்மலையின் உச்சாணியில் 'கௌரி சங்கரம்' என்ற மலைச் சிகரம் இருக்கின்றது. தரை மட்டத்தினின்று சுமார் 30 ஆயிரம் அடி உயரத்தில் அந்த 'எவரஸ்டு' இருப்பதாகக் கணக்கு கூறுகின்றனர். உலகத்திலேயே அதி உயரமான பாகம் அது தான். அங்கு பனி விசேஷமாக இருக்கும். சுவாசிக்கும் காற்று குறைவாக இருக்கும். மனிதன் இந்தச் சிகரத்தினருகே போக முடியுமா வென்பது ஒரு பெரும் புதிராகவே இத்தனை நாள் இருந்து வந்தது. ஆனால் போன வாரத்தில் 'லார்ட் கிளிஸ்டேல்' என்ற பிரிட்டிஷ் ஆகாய விமானி தமது விமானத்தில் ஏறிச் சென்று அந்த கௌரி சங்கரத்தைத் தரிசித்து விட்டு இறங்கி விட்டார். மனோ திடமும், வீர உணர்ச்சியும் மிகுந்திருந்ததால் தான் இக்காரியத்தை அவர் சாதித்தார்.

கௌரி சங்கரத்தைக் காண்பதற்காக இதற்கு முன் ஐந்தாறு தடவை முயற்சிகள் நடந்தும் கௌரி சங்கரத்தைக் காண முடியவில்லை. ஆனால் இந்தத் தடவை காரியம் சித்தித்து விட்டது.

இந்த மகத்தான யாத்திரையைச் செய்ய முற்பட்ட அந்த வீரனின் திறமையை நமது இளைஞர்கள் பின்பற்ற வேண்டும். எங்கேனும் மலையில் விமானம் மோதியிருந்தால் காண்பாரற்று அவ் வீரன் செத்திருக்க வேண்டும். அத்தகைய சாவுக்கு அவ் வீரன் அஞ்சினானா?

அன்று எவரெஸ்ட் யாத்திரை சென்ற வீரர்களுக்குத் தாய்மார்களுண்டு; மனைவிகளுண்டு; அவர்களெல்லாம் இந்த வீரர்களைத் தடை செய்யவில்லை. தமது வம்சத்தில் ஒருவன் பெருங் காரியம் சாதித்தால் அது குலத்திற்கே பெருமை யென அந்த சகோதரிகள் நினைத்து அநுமதித்திருக்க வேண்டும். இந்த மாதிரி நம் இளைஞர்களை வீரச் செய்கைக்கு அனுப்புவதற்கு நம் இந்தியப் பெண்மணிகள் என்றைக்குத் துணிவார்களோ, அறியோம்.

அது மட்டு மன்று. இந்த யாத்திரைக்கான ஏராளமான பொருட் செலவை 'ஹாஸ்டன் சீமாட்டி' என்பவள் ஏற்றுக் கொண்டிருக்கிறாராம். காசைத் துருப் பிடிக்கும்படி பெட்டியில் வைத்துப் பூட்டிக் கொண்டிருக்கும் இந்திய தனவான்களும், அந்த சீமாட்டியின் வாழ்க்கையினின்று ஓர் பாடம் கற்றுக் கொள்வார்களாக!

பொம்மைகளின் பேச்சு

பிரிட்டனில் பிரபுக்கள் சபை யென்று ஒன்று உண்டு. இதற்குப் பல அருமைத் திருநாமங்கள் இருக்கின்றன. 'திண்ணைத் தூங்கிகள்', 'கொலுப் பொம்மைகள்' என்றெல்லாம் அச் சபையார் அழைக்கப்படுகிறார்கள். இதற்கு எழுநூறு பேருக்கு மேல் அங்கத்தினர்களிருந்தாலும், மூன்றே பேர் ஆஜரானல் போதுமாம், கூட்டம் நடத்தி தீர்மானம் நிறைவேற்றலாமாம்.

இந்தியாவின் வெள்ளைக் கடுதாசியைப் பற்றிய விவாதம் இச் சபையில் சமீபத்தில் துவங்கியபோது, மிகச் சிலரே வந்திருந்தார்கள். மற்றவர்களுக்கு வரக்கூடச் சோம்பல்! வந்தவர்களிலும் பலர் கொலுப் பொம்மைகள் மாதிரி சும்மா உட்கார்ந்திருந்தார்களே யொழிய, எவ்வித ஊக்கமும் காட்ட வில்லையாம். ஹோரின் வெள்ளைக் கடுதாசியைப் பெரும்பாலும் ஆதரித்துப் பேசினர்கள்.

வட்டமேஜை சமஷ்டிக் கமிட்டியின் தலைவராயிருந்த ஸாங்கி பிரபுதான் சர்க்கார் தரப்பில் விவாதத்தைத் துவக்கினர். "இந்த வெள்ளைக் கடுதாசியைப் பார்த்தால், தேங்காயை எடுத்துக் கொண்டு வெறுங் கொட்டாங்கச்சியைக் கொடுக்கிறார்கள் என்று இந்தியர் கூறுவர்" என அவரே சொன்னர். என்றாலும், அந்தக் கொட்டாங்கச்சியாகிய, ஹோரின் ஜகஜ்ஜால வெள்ளைக் கடுதாசியையே அவர் ஆதரித்தார். மேலும், "இந்தியாவிலே நமக்குக் கோடிக்கணக்கான நண்பர்கள் இருக்கிறார்கள்" என்று கும்மாளமாய்ப் பேசினர். கொட்டாங்கச்சியை வாங்கிக் கொள்ளவா கோடிக்கணக்கான நண்பர்கள்?

. ஆம்தில் என்ற பிரபுவும் இந்தியாவின் ஒரு நண்பராம். அவர் பேசியதில், "25 வருடங்களுக்கு முன்னே, இந்தியர் ஏதோ ஓர் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கேட்டார்கள். அப்பொழுது அதைக் கொடுத்திருந்தால், மகாத்மா காந்தி ஒத்துழையாமை துவக்கி யிருக்க மாட்டார்; இப்பொழுது கேட்கும் ஆபத்தான குடியேற்ற நாட்டந்தஸ்தையும் கேட்டிருக்க மாட்டார்கள்." என்று சொன்னர். காங்கிரஸ் கோருவதும் காந்தி கோருவதும் பூரண சுயேச்சை என்பதை இவர் அடியோடு மறந்து விட்டார் போலும்!

லாமிங்டன் என்ற பிரபு கூறியதாவது:— "இந்தியாவிலே பல எதிர்க் கக்ஷிகள் இருக்கின்றன. மிகச் சில பிரிட்டிஷ்காரர்கள் இருந்து கொண்டு, எழுபது வருஷங்களாக நீதியாகவும், அனுதாபத்தோடும் இந்தியாவைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். இந்தியர் பொறுப்பு ஏற்க வந்தால், அதற்காக, நமது இந்த அரிய கடமைகளைக் கை விட முடியுமா? கட்சிகள் ஒன்றோடொன்று சண்டை போடாதபடி மத்தியஸ்தர்களாக நாம் இந்தியாவில் இருந்து வரவேண்டியது தான்" என்றார். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் மத்தியஸ்த நிலைமையிலா இருக்கிறது? பூனைகளுக்கு மத்தியஸ்தம் செய்த குரங்கின் கதைதான் நமக்கு இப்போது ஞாபகத்திற்கு வருகிறது.

ஆனல், பிரபுக்கள் சபை என்பது தூங்கு மூஞ்சிகள் சபைதானே! அவர்கள் வாயில் வந்ததை யெல்லாம் தான் பேசுவார்கள். அதைப் பற்றி யெல்லாம் நாம் கவலைப்பட்டு முடியுமா?

மாண்டு போன இருவர்

மாண்டு-போர்டு சீர்திருத்தம் இப்போது இந்தியாவில் அமுலி லிருக்கின்றது. அந்தச் சீர்திருத்தத்தைச் சிருட்டிக்கப் பாடு பட்டவர்களுள் செம்ஸ்போர்ட் என்ற மாஜி வைஸ்ராயும் ஒருவர். ஆனல் அவரது ஆட்சியின் கீழ் தான் ஜாலியன் வாலா பாக் படுகொலை 1919 எப்ரல் மாதத்தில் நடந்தது. ஆனல் செம்ஸ்போர்டு பிரபு இந்த எப்ரல் மாதத்தில் இறந்து போனர்! ஜாலியன்வாலா பாக் கொலை நடந்த மாதத்தில் தானு அவருக்கும் அந்திய காலம் வரவேண்டும்! அது மட்டு மன்று. அவரால் சிருட்டிக்கப்பட்ட மாண்டு-போர்டு சீர்திருத்தமும் மாண்டு போவதற்குக் காலம் வந்து விட்டது. ஆனல் செம்ஸ்போர்டு கொஞ்சம் 'தாராள' மனமுடையவர் என்று பலரால் வருணிக்கப்படுவதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை.

போன வாரத்தில் மேலுலகை அடைந்தவர்களில் நவநகர் சமஸ்தானாதிபதி ஜாம் சாகிப்பும் ஒருவர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு பரம ஊழியர். ஐக்கிய அரசியல் திட்டத்தை எதிர்த்தவர். வைஸ்ராய் 'கப் சப் வாயை மூடு' என்றவுடன் குந்தினவர். லங்காஷயர் துணியை வரவழைத்து இந்தியாவில் விற்கப் போவதாக உறுமினவர். ஆனல் அத்தனை எண்ணமும் இப்போது அவரோடு மறைந்தன. ஆனல் ஜாம் நகர் சாகிப்பான 'ரஞ்சி' ஒரு பெரிய கிரிக்கெட் விளையாட்டுக்காரர். அந்த ஒரு திறமையாவது இராது போயிருந்தால் அவர் சாவைக் கூட யாரும் கவனித்திருக்க மாட்டார்கள்.

விடுதலை

காங்கிரஸ் தினத்தன்று கைதியான 242 பேர்களில் அக்கிராசனம் வகித்த ஸ்ரீமதி நெல்லி சென்குப்தா உள்பட அநேகர் விடுதலை செய்யப்பட்டனர்.

தியாகமூர்த்தி ஜம்னுலால் பஜாஜ் அவர்கள் சிறையினின்று விடுதலை யடைந்தார்.

தண்டனை

காங்கிரஸிற்குப் புறப்பட்ட 10 அகாலியர்கள் ஊர்வலமாகச் சென்ற போது கைது செய்யப்பட்டு ஜாமீன் கொடுக்க மறுத்ததற்காக தலா ஒரு வருஷம் தண்டனை யடைந்தார்கள். சுயேச்சை தினத்தன்று கைதியான நான்கு தொண்டர்களும் சிறைக்குச் சென்றனர். காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டிக்கு உதவி செய்ததற்காக அருணா சுகதேவர் என்பவருக்கு மூன்று மாதம் தண்டனை. கஞ்சத்திலிருந்து காங்கிரஸுக்குச் சென்ற சிலர், ரயில்வே பிரயாணிகளுக்கு காங்கிரஸ் பிரசுரங்களை வினியோகித்ததற்காக தலா 2 மாதம் கடுங்காவல். காங்கிரஸுக்குப் பிரதிநிதி சேர்த்ததற்காக கைது செய்யப்பட்ட 16 பேர்களில் ஒருவருக்கு 6 மாதம், 7 பேருக்கு விடுதலை. மற்றவர்களுக்கு தலா 4 மாதம் தண்டனை.

மசூலிப்பட்டணத்துக் கடுத்த கண்டசால என்னு மிடத்தில் கள்ளுக்கடை மறியல் செய்ததற்காக மூன்று ஸ்திரீகளுக்கு தலா 3 மாதம் வெறுங் காவல்.

கல்கத்தா காங்கிரஸிற்கு முஸப்பர்பூர் பிரதிநிதிகளாகச் சென்ற ஐவருக்கு தலா 4 மாதமும், ஹாஸிப்பூர் சர்வாதிகாரிக்கு 6 மாதமும் கடுங்காவல் தண்டனை.

கண்ணனூரில் காந்தி தினத்தன்று பிரசங்கம் செய்ததற்காக 4 பேர்கள் கைதி. கேரள சர்வாதிகாரி தாமோதரனுக்கு 18 மாதம் கடுங்காவல்.

நாமக்கல்லில் சில காங்கிரஸ் தொண்டர்கள் சைக்ளோஸ்டைல் மெஷினுல் சில காங்கிரஸ் பிரசுரங்கள் தயாரித்து தெருக்களில் வழங்கப்பட்டபோது கைது செய்யப்பட்டு, மெஷினைப் பறிமுதல் செய்துகொண்டு தொண்டர்களை விட்டு விட்டனர். கள்ளிக்கோட்டையில் தெருக்களில் கதர் கட்டி யிருப்பவர்களை யெல்லாம் போலீசார் வழி மறித்துக் கேள்விகள் கேட்கின்றனராம்.

ஜாமீன்

கல்கத்தா "ஆனந்த பஜார்" பத்திரிகை 1000ரூ. ஜாமீன் கட்டி யிருந்ததில் 500ரூ. பறிமுதல் செய்யப்பட்டது. மீண்டும் ரூ. 2000 ஜாமீன் கேட்கப்பட்டதற்கு பிரசுர கர்த்தா அப்பீல் செய்ய, அப்பீலும் மறுக்கப்பட்டது.

கல்கத்தாவில் வங்காள பந்தோபஸ்துச் சட்ட அதிகாரப்படி மூன்று மாஜிஸ்திரேட்டுகளுக்கு பயங்கர இயக்கத்தை ஒடுக்குவதற்காக விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவாம்.

காங்கிரஸ் தலைவர்

தற்காலம் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக ஸ்ரீமான் ஜெயராம் தாஸ் தௌலத்ராம் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கள்ளிக்கோட்டைக் கடுத்த கோபாலபுரம் கோக்லே வாசகசாலையில் படிக்கும் 3 ஹரிஜன மாணவர்கள் தெருக்களில் விற்கப்பட்ட காங்கிரஸ் கார்டுகளை வாங்கி உறவினர்களுக்குக் கடிதம் எழுதியதற்காக பள்ளிக்கூடத்தினின்றும் நீக்கி வைக்கப்பட் டிருக்கின்றனர்.

திண்டுக்கல் தீண்டாமை விலக்குச் சங்கத்தினர்கள் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து பொது ஜனங்களிடையே பிரசங்கங்கள் செய்து வருகிறார்கள்.

ஜப்பான் போட்டி

இந்தியாவில் இறக்குமதியாகி, இந்தியக் கைத் தொழிலை நாசமாக்கும் ஜப்பானிய சாமான் போட்டியைத் தடை செய்வதற்கான மசோதாவை இந்த வாரத்தில் இந்தியா சட்ட சபையில் 8ம் தேதி ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

விமான விபத்து

உலகத்திலுள்ள ஆகாய விமானங்களுக்கெல்லாம் மிகவும் பெரியதான "அக்ரான்" என்னும் விமானம் 77 பேர்களை ஏற்றிக் கொண்டு போகையில் சமுத்திரத்தில் விழுந்து விட்டது. மூவர் உயிர் தப்பினர். மற்றவர் கூட்டோடு கைலாசம் சென்றனராம்.

அமெரிக்காவில் 118 சதுர மைலுக்கு ஒரு பாங்கு, பிரிட்டனில் 11 சதுர மைலுக்கு ஒரு பாங்கு, ஜப்பானில் 23 சதுர மைலுக்கு ஒரு பாங்கு, இந்தியாவில் 2735 மைலுக்கு ஒரு பாங்கு விதம் இருக்கின்றனவாம்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.